# த.வெ.க. அரசில் 4 பவர் சென்டர்கள்!

## அதிகாரிகள் நியமனத்தில் கடும் இழுபறி!

**சென்னை, மே 24-**

**த.வெ.க. அரசில் தற்போது 4 பவர் சென்டர்கள் உருவாகியிருப்பது தெரியவந்துள்ளது. இந்த பவர் சென்டர்கள் மூலமாகவே அமைச்சர்கள், அதிகாரிகள் நியமனம் நடைபெற்றுள்ளது. இதனால் முடிவெடுப்பதிலும், அதை அமல்படுத்துவதிலும் கடும் குழப்பம் ஏற்பட்டு வருவதாக கூறப்படுகிறது. தமிழகத்தில் யாரும் எதிர்பாராத விதமாக த.வெ.க. அதிக இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால் ஆட்சி அமைக்க பெரும்பான்மை கிடைக்காததால் இழுபறி ஏற்பட்டு ஆட்சியை அமைத்துள்ளனர். தேர்தல் முடிவுகள் 4ம் தேதி அறிவிக்கப்பட்டது. 10ம் தேதிதான் பதவி ஏற்பு விழா நடைபெற்றது.**

பதவி ஏற்கும்போது 9 அமைச்சர்கள் மட்டுமே பதவி ஏற்றனர். அதன்பின்னர் கடந்த 21ம் தேதி 2வது முறையாக பதவி ஏற்பு நிகழ்ச்சி நடந்தது. அப்போது 23 அமைச்சர்கள் பதவி ஏற்றனர். காங்கிரசைச் சேர்ந்த 2 பேர் பதவி ஏற்றனர். பின்னர் விசிக, ஐயுஎம்எல் கட்சியைச் சேர்ந்தலா ஒருவர் என விஜய்யையும் சேர்த்து மொத்தம் 35 பேர் பதவி ஏற்றுள்ளனர். அமைச்சர்கள் நியமனத்தில் கடுமையான குழப்பம் நிலவியதாக கூறப்படுகிறது. அதிகாரிகள் நியமனத்திலும் குழப்பம் நிலவி வருகிறது. அதற்கு முக்கிய காரணம் 4 பேர் பவர் சென்டர்களாக இருப்பது தான்.

விஜய், புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, ஜான் ஆரோக்கியசாமி என 4 பேர் பவர் சென்டர்களாக உள்ளனர். இவர்கள் நான்கு பேர் மூலமாகத்தான் பலர் அமைச்சர் பதவியை பிடித்துள்ளனர். குறிப்பாக வேட்பாளர் தேர்விலும் இந்த மோதல் எதிரொலித்துள்ளது. இந்த 4 பவர் சென்டர் தவிர, செங்கோட்டையன் தனியாக ஒரு ரூட் போட்டு இந்த 4 பவர் சென்டர்களிடம் தன்னுடைய ஆதரவாளர்களுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுத்துள்ளாராம்.

வேட்பாளர் தேர்வை புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா ஆகியோர்தான் செய்துள்ளனர். இந்தப் பட்டியல் ஜான் ஆரோக்கியசாமியிடம் சென்றுள்ளது. அவர் சில மாற்றங்களை செய்துள்ளார். கடைசியாக விஜய்யிடம் சென்றுள்ளது. அவரும் சில வேட்பாளர்களைமாற்றியுள்ளார்.

இதேபோலத்தான் அமைச்சரவை நியமனத்திலும், புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா ஆகியோர்தான் அமைச்சர்களை தேர்வு செய்து, அவர்களுக்கான இலாகாக்களை தேர்வு செய்துள்ளனர். பின்னர் இந்தப் பட்டியல் விஜய் கவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர் ஜான் ஆரோக்கியசாமியிடம் பேசி, பட்டியலை இறுதி செய்துள்ளார். இறுதி செய்த பட்டியல்தான் கடைசியாக புஸ்ஸி ஆனந்திடம் வழங்கப்பட்டு ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. புஸ்ஸி ஆனந்த் தயாரித்த அமைச்சரவை பட்டியல், விஜய்யிடம் சென்ற பின்னர் மாற்றம் நிகழ்ந்துள்ளது. இதனால் அமைச்சராகப் போகிறவர்களிடம் விஜய்யே போன் செய்து பேசி, ஏதோ தான் மட்டுமே பட்டியல் தயாரித்ததுபோல அவர்களிடம் பேசியுள்ளார்.

ஆனால், அவர்கள் புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, ஜான் ஆரோக்கியசாமி மூலம் பதவி பெற்றது அவர்களுக்கு மட்டுமே தெரியும் என்பதால் அவர்களும் விஜய் மட்டுமே பதவி கொடுத்துபோல நடித்துள்ளனர். அதாவது நடிகனிடமே அமைச்சர்கள் நடித்துள்ளனர். அதே போல இலாகா விவகாரத்திலும் அப்படியே நடந்துள்ளது. அதில் விஜய், புஸ்ஸி ஆனந்த், ஆதவ் ஆகியோர் அமைச்சர்களாகிவிட்டாலும், ஜான் ஆரோக்கியசாமி அமைச்சராகவில்லை. ஆனால் அவர் அமைச்சரவையில் நடப்பது தெரிந்து கொள்வதற்காக தன்னுடைய ஆளாக நிர்மல் குமாரை நியமித்துள்ளாராம். இந்த 4 பவர் சென்டர்கள், அதிகாரிகள் நியமனத்திலும் முடிவுகளை எடுக்கிறார்களாம். தலைமைச் செயலாளர், டிஜிபி ஆகியோரை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. அவர்களில் தலைமைச் செயலாளர் சாய் குமார், ஜூலை மாதத்தில் ஓய்வு பெறுகிறார். இதனால் அதுவரைதான் தலைமைச் செயலாளராக இருக்கிறேன் என்று விஜய்யிடம் கூறியுள்ளார்.

அதை அவரும் ஏற்றுக்கொண்டார். அதைத் தொடர்ந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனத்தைப் பொறுத்தவரை தலைமைச் செயலாளர் சாய்குமார், மாறுதல் பட்டியலை தயாரித்து முதல்வர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கிறார். அங்கு சில மாற்றங்கள் செய்யப்பட்டோ அல்லது அப்படியேவாகவோ பைல் வருகிறது. ஆனால் முதல்வரின் அலுவலகம் செல்லும் பைல் 3 நாட்களுக்குப்பிறகுதான் தலைமைச் செயலகத்துக்கு திரும்பி வருகிறதாம். சென்னை போலீஸ் கமிஷனர் அமல்ராஜும், விஜய்யும் ஒரே சர்ச்சுக்கு செல்கிறவர்கள். இதனால் அந்த சர்ச் பங்கு தந்தை கூறியதால் நேரடியாக விஜய்யே தேர்வு செய்தாராம்.

ஆனால் மற்ற பதவிகளைப் பொறுத்தவரை ஆளாளுக்கு பரிந்துரை செய்கிறார்களாம். கடைசியில் விஜய் முடிவு செய்கிறாராம். ஆனால் பதவி ஏற்பு விழாவில், இந்த ஆட்சியைப் பொறுத்தவரை ஒரே பவர் சென்டர் தான் மட்டுமே என்றார். ஆனால் அப்படி இல்லை என்கின்றனர் அதிகாரிகள். சென்னை போலீஸ் கமிஷனர் அமல்ராஜின் பைல் கடந்த திங்கட்கிழமையே முதல்வர் அலுவலகம் சென்றதாம். ஆனால் வியாழக்கிழமைதான் பைலுக்கு விஜய் ஒப்புதல் கொடுத்ததை உதாரணமாக கூறுகின்றனர். பைல்கள் தாமதமாவதோடு முடிவுகளையும் எடுக்க முடியாமல் திணறி வருகிறார்களாம்.

தமிழகத்தில் போலீஸ் அதிகாரிகள் மாற்றம் நடைபெறவில்லை, செயலாளர்கள் மாற்றம் நடைபெறவில்லை. இதற்கெல்லாம் காரணம் இந்த கால தாமதம்தான் என்கின்றனர் அதிகாரிகள். இதே நிலைமை நீடித்தால், ஜெயலலிதா ஆட்சியை விட மோசமான நிலைக்கு விஜய் ஆட்சி செல்லும் என்கின்றனர் தலைமைச் செயலக அதிகாரிகள்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி ; காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் இருவர் த.வெ.க. அமைச்சரவையில் இணைந்துள்ளதை, ‘வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள்’ என்று காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் பெருமிதப் பட்டிருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா; இது இந்திய வரலாற்றுச் சிறப்புமிக்க நாளல்ல; மாறாக ராகுல் தலைமையிலான காங்கிரஸ் வரலாற்றில் சிறப்பு மிக்க நாள்; காரணம் இந்த நாள், அரசியல் அரங்கில், முதுகில் குத்தியதையும், குதிரை பேரத்தையும் அடையாளப் படுத்தும் நாள் !**

### காவிரியின் குறுக்கே மேகதாட்டுவில் அணை: கர்நாடக அரசைக் கண்டித்து

# ஜூன் 2 இல் சென்னையில் அறப்போர் ஆர்ப்பாட்டம்!

## பொதுமக்களுக்கு வைகோ அழைப்பு!

சென்னை, மே 24-

காவிரி நதியின் குறுக்கே மேகதாட்டு எனும் இடத்தில் கர்நாடக அரசு அணை கட்ட திட்டமிட்டு 5,900 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, அணை கட்டுவதற்கான பொருட்களை ஆயத்தப் படுத்தி வருகிறது.



அப்படி அணை கட்டப்பட்டு, 68 டி.எம்.சி. தண்ணீர் அதில் தேக்கப்பட்டால், காவிரி மேலாண்மை ஆணையமும், உச்சநீதிமன்றமும் வழங்கிய தீர்ப்புகளுக்கு விரோதமாக அது அமையும். ஏற்கனவே 15 இலட்சம் ஹெக்டேர் ஏக்கர் பாசனத்தை தமிழ்நாடு இழந்து நிற்கும் நிலையில், மேட்டூர் அணைக்கே தண்ணீர் வராமல், கொள்ளிடமும், கல்லணையும் வறண்டு, தஞ்சை மாவட்டம் உள்ளிட்ட சோழ மண்டலமாம் டெல்டா மாவட்டங்கள் பட்டினிப் பிரதேசமாகும்.

மேகதாட்டுவில் அணை கட்ட 2014 டிசம்பர் 7, 8 தேதிகளிலேய அன்றைய மத்திய அமைச்சர் அனந்தகுமார் அவர்கள் இல்லத்தில் கர்நாடகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சி எம்.பி.க்களும், மத்திய அமைச்சர்களும் கலந்துகொண்டு சதி ஆலோசனை செய்து மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கு கர்நாடக அரசுக்கு மறைமுகமாக மத்திய அரசு ஏற்பாடு செய்து கொடுத்த செய்தி இந்து ஆங்கில நாளேட்டில் விரிவாக வெளியிடப்பட்டது.

அதை அறிந்து, காவிரி பாதுகாப்பு இயக்கத்தை அமைத்து, 212 விவசாய அமைப்புக்கள் பங்கேற்ற கூட்டத்தை தஞ்சையில் நடத்தி, சோழ மண்டலம் முழுக்க ஊர் ஊராகச் சென்று மேகதாட்டு அணையால் வரும் ஆபத்தை தஞ்சை மண்டல விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் வரப்போகிற அபாயத்தை எடுத்துக் கூறிய கடமையை மறுமலர்ச்சிதிராவிடமுன்னேற்றக் கழகம் செய்தது.

தற்போது கர்நாடக மாநில துணை முதலமைச்சர் சிவக்குமார் அவர்கள் மேகதாட்டு அணையைக் கட்டியே தீருவோம் என்று ஆணவத்தோடு அறிவித்திருப்பதால், கர்நாடக அரசைக் கண்டித்தும், மேகதாட்டு அணையைக் கட்ட மத்திய அரசு அனுமதி அளிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தியும்

வருகிற 2026 ஜூன் 02 ஆம் நாள் செவ்வாய்க் கிழமை அன்று காலை 10 மணி அளவில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி,

மனிதநேய மக்கள் கட்சி, மனிதநேய ஜனநாயகக் கட்சி, சோசியல் டெமாக்ரடிக் கட்சி, மே 17 இயக்கம், தமிழக வாழ்வுரிமைக் கட்சி, தமிழ்ப் புலிகள் கட்சி, தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை, தற்சார்பு விவசாயிகள் சங்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து எனது தலைமையில் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகே மாபெரும் அறப்போர் ஆர்பாட்டம் நடைபெறும்.

இந்த அறப்போர் ஆர்ப்பாட்டத்திற்கு விவசாய பெருமக்களும், வணிகர்களும், பொதுநல அமைப்பினரும் நல்லாதரவு தர வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன் என்று ம.தி.மு.க. பொதுச் செய லாளர் வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில்

# தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் திருமதி கீதாஜீவன் சிறப்புரை!

தூத்துக்குடி, மே 24-

தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளரும், தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்களும், மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான திருமதி. கீதாஜீவன் அவர்களும் கலந்துகொண்டு கழக வளர்ச்சிப் பணிகள் குறித்தும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது குறித்தும் ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்கள்.

மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினர்கள் மார்க்கண்டேயன், கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜெகன் பெரியசாமி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் ராஜ்மோகன் செல்வின், ஆறுமுகம், ஏஞ்சலா, மாவட்டப் பொருளாளர் சுசி ரவீந்திரன், மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், கயத்தாறு முன்னாள் யூனியன் சேர்மன் SVSPமாணிக்க ராஜா, ஒன்றியக் கழக செயலாளர்கள் சின்னப்பாண்டியன், சுப்ரமணியன், முருகேசன், கருப்பசாமி, ஆர். ராதாகிருஷ்ணன், ஜெயக்கண்ணன், செல்வராஜ், மும்மூர்த்தி, என். ராதாகிருஷ்ணன், சின்ன மாரிமுத்து, காசி விஸ்வநாதன், நவநீத கண்ணன், ராமசுப்பு, அன்பு ராஜன், இம்மானுவேல், பகுதி கழகச் செயலாளர்கள் ஜெயக்குமார், நிர்மல்ராஜ், சுரேஷ்குமார், ரவீந்திரன், ராமகிருஷ்ணன், மேகநாதன், பேரூர் செயலாளர்கள் கிருஷ்ணகுமார், சுரேஷ் கண்ணன், பாலகுமார், வேலுச்சாமி, பாரதி கணேசன் மற்றும் மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட திரளானோர் கலந்து கொண்டனர்.

மேலும் அக்கூட்டத்தில் கடந்த சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட பிரச்சாரத்திற்கு நன்றி தெரிவித்தல், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுதல், விளாத்திகுளம் கோவில்பட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் கழக வெற்றிக்கு உறுதுணையாக இருந்த கழக நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்தல், 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஒருங்கிணைந்த தூத்துக்குடி மாவட்ட திமுக மாவட்டச் செயலாளராக கோலோச்சிய என். பெரியசாமி அவர்களின் 9வது நினைவு தினத்தை அனுசரித்தல் ஆகிய நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.



விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், ஆத்திப்பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் வாக்களித்து வெற்றி பெற வைத்த வாக்காளப் பெருமக்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப்புராஜ், ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ், இளைஞர் அணிச் செயலாளர்கள் அழகு ராமானுஜம், தங்கமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் திருமதி கீதாஜீவன் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.